1975 நவம்பர் 12]

விசைத்தறிகள்

*314 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அதிக விசைத் தறிகளுக்கு உரிமம் வழங்கும்படி மத்திய அரசிடம் நமது மாநில அரசு கோரிக்கை ஏதேனும் அண்மையில் விடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், மத்திய அரசு அளித்த பதில் யாது?

மாண்புமிகு திரு. செ மாதவன்: (அ) ஆம்.

(இ) இதுவரை இறுதி முடிவு தெரிவிக்கப்படவில்லை.

Inam lands

* 315. Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state :

(a) whether appeals against the taking over of the Inam lands in Tirunelveli district and Dharmapuri are pending with the Supreme Court; and.

(b) if so, the steps taken thereon?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) தர்மபுரி மாவட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட எந்த இனும் அல்லது மைனர் இனும் எஸ்டேட் சம்பந்தமாக இந்தியத் தலைமை நீதி மன்றத்தில் அப்பீல் ஏதும் இல்லை. ஆனால் திருநெல்வேலி மாவட்டம், கொடரங்குளம் கிராமத்தில் உள்ள இனும் எஸ்டேட் எடுத்துக் கொள்ளப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட சிவில் அப்பீல் இந்தியத் தலைமை நீதி மன்றத்தில் விசாரணையில் உள்ளது.

(இ) தலைமை நீதி மன்றத்தில், அப்பீல் துரிதமாக பைசல் செய்யப்பட வேண்டும் என்று அரசால் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

THIRU B. VENKATASWAMY : From the answer given by the Hon. Minister I came to understand that there is a case pending in the Supreme Court from Hosur Taluk. May I know from the Hon. Minister whether it will be expedited, so that people there will be benefited by getting lands for them?